செ.வெ.எண் : 47/ஆகஸ்ட் நாள் : 24.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தற்காலிக மின்சாரப் பணியாளர் தொழிற்பிரிவின் இளநிலை பயிற்சி அலுவலர் (J.T.O) பணியிடத்திற்கு தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் செயல்படும் (Public Private Partnership) மின்சாரப்பணியாளர் தொழிற்பிரிவின் இளநிலை பயிற்சி அலுவலர் (J.T.O) பணி தற்காலிகமாக பயிற்றுநர் நிலையில் ஒரு பணியிடத்தை ஒப்பந்த அடிப்படையில் / (200 Point Patterns) பொதுப்பிரிவினர் முன்னுரிமையில் பயிற்றுநர் General Turn (Priority) நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான கல்வித்தகுதி எலக்ட்ரிசீயன் தொழிற்பிரிவில் N.T.C / N.A.C அல்லது பட்டயப்படிப்பு (Electrical and Electronics Engg. E.E.E) படித்திருப்பதோடு குறைந்தபட்சம் மூன்று வருடம் நன்கு பணியாற்றிய முன் அனுபவம் இருக்க வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இந்த பயிற்றுநர் பதவிக்கு மாதம் தொகுப்பூதியமாக ரூ.20,000/- வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த பயிற்றுநர் பதவியானது முற்றிலும் தற்காலிகமானது எனவும் இதனைக் கொண்டு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது எனவும் தெரிவிக்கப்டுகிறது.

மேற்காணும் பயிற்றுநர் பதவிக்கு விண்ணப்பிக்க விருப்பம் உள்ளோர் தங்களது சுய விபரங்களை (Biodata with Photo) பூர்த்தி செய்து 15.09.2017-க்குள் "முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இராமநாதபுரம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ..ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**